கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,000 ஏக்கரிலும் மதுரை மாவட்டத்தில் 2,000 ஏக்கரிலும் கோக்கோ பயிரிடுவதற்கான செயற்குறிப்பு ஒன்று வேளாண்மைத்துறை இயக்குநரிடமிருந்து வந்துள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : கன்னியாகுமரி மாவட்டத்தில் கோக்கோ பயிர் செய்யப்பட்டு இப்போது விளைவு எடுக்கப்பட்டு வருகிறது. அதை வாங்குவதற்கு ஆள் இல்லாமல் விவசாயிகள் வருந்துகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, அந்த கோக்கோ விளைபொருள்களை வாங்குவதற்கு அரசாங்கம் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரையில் இரண்டாயிரம் ஏக்கர் இதற்காக ஒதுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது எவ்வளவு ஏக்கரில் சாகுபடி செய்யப் பட்டிருக்கிறது. அதனுடைய பலன் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தனிக் கேள்வி போடவும்.

தென்னை தீவிர சாகுபடித்திட்டம்

* 334 வினா—**திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தென்னை தீவிர சாகுபடி திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுகிறது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தென்னை தீவிரசாகு படித்திட்டம், கோவை மாவட்டத்திலுள்ள பொள்ளாச்சியிலும் மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டியிலும் நடைபெற்று வருகிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, cocoanut is coming very nicely in the Dharmapuri and Salem districts. So, may I know whether any such crash programme would be implemented in those districts?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சேலம், தருமபுரி மாவட்டத்தில் இன்னும் செயல்படுத்த முடியவில்லை.

திரு. த. சோலையா : இரண்டு மாவட்டங்களிலே தென்னை அபிவிருத்தித் திட்டங்கள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இராமநாதபுரத்தில் இருக்கும் கடலோரப் பகுதிகளும், வைகை ஆற்று வண்டல் பகுதிகளும் தென்னை தீவிரச் சாகுபடிக்கு ஏற்ற அருமையான இடங்களாக இருக் கின்றன. அந்தப் பகுதிகளையும் அமைச்சர் அவர்கள் தென்னை சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளுவார்களா ?

1971 டிசம்பர் 13]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்சமயம் இல்லை. ஆனால் வட ஆற்காடு மாவட்டத்தில் தென்னை தீவிர சாகுபடித் திட்டம் பற்றிப் பதில் சொன்னேன். இந்தத் தென்னை தீவிர சாகுபடித் திட்டம் 1963-64. 1965-66-ல் தஞ்சை மாவட்டத்தில் அதிகாரம்புட்டினத்தில் செயல்படுத்தப்பட்டது. 1966-67, 1968-69-ல் வட ஆற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் பகுதியிலும், தஞ்சை மாவட்டத்தில் குருவிகொம்பை பகுதியிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு தற்சமயம் வட ஆற்காடு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுடைய கேள்வி இராமநாதபுரத்தில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப் படுமா என்பதுதான். அதற்குப் பதில் சொன்னால் போதும். திரு. ஏ. எம். இராஜா . . .

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சியில் தென்னை சாகுபடி செய்யத்திட்டம் ஏற்படுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். தென்னையில் புதிய ஹைபிரிட் வெரைட்டிஸ் கண்டுபிடித்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் அதற்கு முயற்சி எடுத்திருக்கிறார்களா? அப்படி எடுத்துக் கொண்டிருந்தால், இப்போது ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ஹைபிரிட் கன்றுகளை அரசு உற்பத்தி செய்கிறது? அதை விவசாயிகளுக்கு எந்த முறையில் பகிர்ந்து கொடுக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தனியாக கேள்வி போடவும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தென்னை பயிரிட பாலாறு படுகை முழுவதும் சிறந்த ஏற்ற இடமாக இருக்கிறது என்று சொல்லப் படுகிறது. பாலாறு படுகையைச் சுற்றி அரசாங்கம் தென்னைப் பயிர் வைக்க முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்சமயம் இல்லை.

திரு. கோவை செழியன் : இந்தத் தென்னை சாகுபடி செய்கிற இடங்களிலும், மற்ற இடங்களிலும், குறிப்பாக கோவை மாவட்டத்தில் இதற்கு ஒருவித சோகை நோய் ஏற்பட்டு மருந்து எதுவும் போடப்பட்டதாகக் காணவில்லை. அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படும்.

பூச்சி மருந்துகள் இலவசமாகத் தெளித்தல்

*335 வினா—**திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—